22.09.2025

O.S.No. 26/2023

PW1–வேலுச்சாமி – த/பெ. மருதையாத்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.09.2025

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. எனது தந்தை வழி தாத்தாவின் பெயர் நன்னிதேவர். நன்னிதேவருக்கு 2 மகன்கள் என்றால் சரிதான். மருதையாத்தேவர், சுப்பையாத்தேவர் எனது தாத்தாவின் வாரிசுகள் என்றால் சரிதான். நான் மருதையாத்தேவரின் மகன் என்றால் சரிதான். எனது கிராமத்தில் மூத்தவர் பெயரில் பட்டா ஏற்படும் என்றால் சரியல்ல. நான் M.A, B.Ed படித்துள்ளேன். 1ம் பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. தபசில் சொத்து எனது சுயசம்பாத்திய சொத்துகிடையாது என்றால் சரிதான்.

2. வாய்மொழி பாகத்தில் வடபக்கம் எனக்கும், தென்பக்கம் ரோடு, 1ம் பிரதிவாதியின் இடம் தெற்குக்கும், வடக்கிற்கும் இடையில் உள்ளது. கலிங்கப்பட்டி – சுரண்டை பிரதான சாலைக்கு வடபக்கம் எனது இடம் உள்ளது. ரோட்டிற்கு தென்பக்கம் பிரதிவாதிக்கு இடம் உள்ளது என்றால் கிடையாது. ஆதியில் பட்டா நன்னிதேவர் பெயரில்இருந்தது என்றால் எனக்கு தெரியாது. ஆதியில் பட்டா எண்.969 என்ற எண்ணில் நன்னித்தேவர் பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ.1 ஆவணம் வழங்கும்போது விசாரணை நடைபெறவில்லை என்றால் எனக்கு தெரிந்து நடைபெறவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் 2003 ம் ஆண்டு எனது தகப்பனார் பெயருக்கு வந்தது

என்றால் சரிதான். தாவா சொத்தின் தற்போதைய சர்வே எண்.42/1 எப், பட்டா எண்.985 ஆகும்.

4. வா.சா.ஆ.7 ஆவணத்திற்காக 22.07.2002ம் ஆண்டு மனு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2002ம் ஆண்டுக்கு முன்பே 1997–1999 பிரதிவாதியின் தந்தை பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு பிரதிவாதியின் எதிருரை, எதிருரையுடன் தாக்கல் செய்த ஆவணம் பற்றி தெரியாது. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதியின் சங்கதிகளை மறுத்து சொல்லியிருந்தால் அது என் தகவலின் அடிப்படையில் தயார்செய்யப்படவில்லை என்றால் பிரதிவாதி என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றே தெரியாது.

5. வா.சா.ஆ.7 ஆவணம் வழங்கும்போது எந்த விசாரணையும் நடைபெறவில்லை. வா.சா.ஆ.7 ஆவணம் எந்தவித விசாரணையின்றி வழங்கப்பட்டதால் அது சட்டபடி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பற்றி எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண்.42/1 எப், ஆனது பட்டா எண்.517 ல் வரவைக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முந்தைய தீர்வை ரசீதோ, பிந்தைய தீர்வை ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இதுமட்டும்தான் தற்போது உள்ளது. மீதமுள்ள தேடி பார்க்கவேண்டும்.வா.சா.ஆ.2 ஆவணம் வருவாய் துறை அதிகாரிகளை சரிகட்டி வாங்கிய ஆவணம் என்றால் சரியல்ல. நான் வருவாய் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றேன்என்றால்

சரியல்ல, கூட்டுறவுத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றேன். நான் பணியாற்றிய நிறுவனமானது வருவாய் துறை கட்டுப்பாட்டிற்குள் வரும் என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்த வில்லங்கசான்று தாவா சொத்து எனக்கு வந்ததாக துலங்காது என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் உள்ளது. தாவாசொத்து எங்களுக்கு பூர்வீக சொத்து என்றால் சரிதான், சுயசம்பாத்திய சொத்து இல்லை. தாவாசொத்தின் நான்குதிசையிலும் நான்தான் உள்ளேன். நான்குபக்கமும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து, நடுவில் பரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு நான்குபக்கமுள்ள சொத்துக்கள் அனைத்தும் எனதுதந்தை வழி வந்த சொத்துக்களாகும்.

8. கீழ்பக்கமுள்ள சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து, அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. பிராது தபசில் விவரத்தில் மேல்பக்கமும், வடபக்கமும் எனக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள விவரம் சரி. வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி வடபக்கம், மேல்பக்கம் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து பாகபிரிவினையில் கிடைத்த சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பட்டா எண்.985 பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை, ஏனென்றால் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த ஏற்பாடு ஆவணம் என்பதால். எனக்கு பிரதிவாதியின் பட்டா எண் தெரியாது. எனது பட்டா எண்.985.

9. வா.சா.ஆ.4 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கத்தல்ல ஆவணம் என்று மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் தபசில் சொத்தில் என்ன விவசாயம் செய்கிறேன் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் சாட்சி வா.சா.ஆ.5 ஆவணத்தை வாங்கி பார்த்துவிட்டு அதில் பயிர் செய்யும் விவரம் சொல்லவில்லை என கூறினார்.

10. தாவா சொத்து எனக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்டது என வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதியின் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை எதிர்த்து நான் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு செய்தேனா என்றால் இல்லை, எனக்கு அது தெரியாது. மாவட்ட பதிவாளர் நான் கொடுத்த மனுவின் விசாரணையில், மாவட்ட பதிவாளருக்கு விசாரணை செய்ய அதிகாரம் இல்லை என கூறி திருப்பி அனுப்பப்பட்டது. வா.சா.ஆ.6 ஆவணம் மாவட்ட பதிவாளர் உத்தரவு என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 2 வது பக்கத்தில் பிரதிவாதி உளுந்து பயிரிட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நானும் பயிரிடுவேன்,அவரும் பயிரிடுவார்.

11. தாவா சொத்தில் எனது அனுபவத்தை காட்டக்கூடிய பயிர் அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது தாவா சொத்தின் பட்டா எண்.4523, பட்டா எண்.985 கிடையாது என்றால் சரியல்ல.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள நான்குமாலில்

உள்ளபடி சொத்துவிவரம் தெரியுமா என்றால் சரியல்ல, புலவரைபடம் படி தெரியும். வா.சா.ஆ.4 ஆவணம் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு திருமண வைபோகம் மற்றும் வளர்ச்சிக்காக ஒரு ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1978ம் ஆண்டே 1ம் பிரதிவாதியின் தந்தை பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளை கஷ்ட நஷ்டப்படுத்தவேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.